
காஷ்மீரத்தில் ஜவஹர்



இலக்கிய மன்றம்

இதே பதிப்பு நேருவில் இருக்கிறது.
இது இந்திய அரசியலுக்கு.

காஷ்மீரத்தில் ஜவஹர்

எஸ். ராமகிருஷ்ணன்

விநியோக உரிமை :

இலக்கிய மன்றம்

சைதாப்பேட்டை :: சென்னை

முதற் பதிப்பு
1946-ம் வருஷம் செப்டம்பர்மீ

விலை அணா 12

ஆடல் பாடல் பிரஸ்,
Q. H. M. S. 491—
16-9-46— சென்னை.

பதிப்புரை

காஷ்மீரப் போராட்டத்தின் தலைவன் ஷேக் அப்துல்லாவுக்கு மூன்று வருட வெறுங்காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. மக்களின் பிரதிநிதிக்கு ஏகாதிபத்தியப் பாவை கொடுத்த பரிசு அது. "விடாதே! மேல் நடிவடிக்கை எடு" என்று அப்துல்லாவின் வக்கீலுக்கு நாற்பது கோடி மக்களின் பிரதிநிதி ஜவஹர் தந்தி யடித்துள்ளார். மக்களின் போர், சமஸ்தானப் பிரஜைகளின் முன்னணிப் போர் தொடர்ந்து நடக்கிறது.

இன்றைய நிலையில்—ரஷியப் படைகள் காஷ்மீர் எல்லையை நெருங்குகிறார்கள் என்று ஏகாதிபத்தியம் சரடுவிடும். இன்றைய நிலையில் காஷ்மீரத்தைப் பற்றியும், அங்கே இரும்புத் திரைகளுக்கப்பால் என்ன நடக்கிறதென்பதையும் நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இப்புத்தகத்திலே திரு. எஸ். ராமகிருஷ்ணன் ஏகாதிபத்தியச் சூதாட்டத்தை அம்பலப்படுத்துகிறார். ஏகாதிபத்திய—சுதேச மன்னர்களின் கூட்டணியை உடைத்தெறிகிறார்.

படியுங்கள். சிந்தியுங்கள். காஷ்மீர் மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரியுங்கள்.

குயிலன்.

1. காஷ்மீரத்தில் ஜவஹர்

—(o)—

காஷ்மீரில், எரிமலை வெடித்துவிட்டது. தீப்பிழம்புகளை கக்குகின்றன! ருத்ராவேசம் கொண்ட 40 லட்சம் மக்களின் நெற்றிக் கண்கள் திறந்துவிட்டன!

போராட்டத்தில் வாபஸ் கிடையாது, தற்காலிக நிறுத்தம் கிடையாது, சமரசம் கிடையாது, கஷ்மீரிகளின் ஆட்சி காஷ்மீரில் ஏற்படும் வரை போர் நீடிக்கும்.

சமரசம் செய்வதா? யாருடன்? நூற்றுக் கணக்கான காஷ்மீரிகளின் உயிரைக் குடித்த ராஜாங்கத்துடனா? சிறையில் பொது ஜனத் தலைவர்களை சித்திரவதை செய்து கொல்லும் (சிறையில் இருவர் இறந்துவிட்டனர்) பாஸிஸ்ட் பேய்களுடனா? பொய் பேசி ஊரை ஏமாற்றப் பார்க்கும் கொயபல்ஸ் கூட்டத்துடனா?

உண்மைக்கும் பொய்க்கும், நீதிக்கும் அநீதிக்கும், ஜனநாயத்துக்கும் யதேச்சாதிகாரத்தும், சுதந்திரத்துக்கும் ஆதிக்கத்துக்கும் சமரசம் கிடையாது! சமர்தான்—ஜய பேரிகை கொட்டும்வரை சுதந்திர பிரேமிகள் சமர் செய்வார்கள்!

காஷ்மீர் போராட்டத்தை செய்தித் தணிக்கை என்ற இரும்புப் படுதா உலகத்திலிருந்து மறைக்கப் பார்த்தது. கைக் கூலிநிருபர்கள் மூலம் அதிகாரவர்க்கம் செய்திகளை தயாரித்து அனுப்பியது. ஹிந்து ராஜ்யத்தை எதிர்த்து முஸ்லீம்கள் கலகம் செய்வதாகம், ருஷ்ய காடியின்

குளம்புகள் காஷ்மீரத்தில் பதிந்துவிட்டதாகவும் விதவிதமாக பூச்சாண்டிகள் கிளப்பப்பட்டன.

ஆனால் பண்டித நேருவின் காஷ்மீர் விஜயம் பிரச்னையைத் தெளிவுபடுத்தியது. பண்டிதநேரு வந்து உண்மையை தெரிந்து கொண்டால், உலகத்தின் நிந்தனைக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரிடுமென்று உணர்ந்த காஷ்மீர ராஜாவும் அவர் எஜமானர் வேவலும நேருவுக்கே தடை போட்டனர். நேருவையும் சிறையி லடைத்தார்கள்!

ஏகாதிபத்தியத்தின் 'நல்லெண்ணத்துக்கும்' 'நேர்மைக்கும்', மகாராஜாக்களின் 'தேச பக்தி'க்கும் இது உருவான ருசுவாயிற்று! இந்தியா முழுவதும் போராட்டத்தில் குதித்தது நேருவை மீட்க. பிற்போக்கின் பெட்டகமான காஷ்மீர் ஆட்சியை ஒழித்துக் கட்ட காஷ்மீருக்கு படை யெடுப்போமென்றனர் பொது மக்கள். காஷ்மீர் அகில இந்திய பிரச்னையாகிவிட்டது.

மத்தியகால யதேச்சாதிகாரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நடக்கும் போராட்டம் காஷ்மீர் போராட்டம். அது 10 கோடி சமஸ்தான மக்களின் போராட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவிட்டது.

பிரிட்டிஷ் திட்டத்தில், சமஸ்தானாதிபதிகள் மூலம், அரசியல் நிர்ணய சபையில் சூழ்ச்சிகள் செய்ய ஏகாதிபத்யம் கணக்குப் போட்டிருக்கிறது. 93 ஸ்தானங்களை அவர்களுக்கு 'தானம்' வழங்கியிருக்கிறது. இந்த மோசடியை முறியடித்து, சமஸ்தான மக்களின் பிரதிநிதிகளை அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பி, ஏகாதிபத்தியத்துக்குச் சீட்டு கொடுப்பதற்காக நடக்கும் போராட்டம் இந்தப் போராட்டம்.

தேசிய இயக்கத்தில் விழிப்படைந்த தேசீய இனங்களின் இன எழுச்சியை பிரதி பலிக்கும் போராட்டம் இது. தத்தம் தாயகம், பிரிட்டிஷ் இந்தியாவிலும் சமஸ்தானங்களிலும் துண்டாடப் பட்டு, தாய் மொழியும் கலாச்சாரமும் வளர வகையில்லாமல் நிற்பதை எதிர்த்து நடக்கும் போராட்டம். புதிய இந்தியாவில், புதிய தமிழகத்தை, புதிய கேரளத்தை, புதிய கன்னடத்தை, புதிய மகாராஷ்டிரத்தை, புதிய ராஜஸ்தானை, புதிய சீக்கிய நாட்டை, புதிய காஷ்மீரை அமைக்க விரும்பும் மக்களின் போராட்டம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய 584 அல்ஸ்டர்களை ஒழித்துவிட்டு, இனவாரியாக ஒன்றுபட்டு, சம அந்தஸ்தில் சேர்ந்து சகோதர இனங்களின் குடும்பமாக வாழும் புதிய இந்திய யூனியனை அமைக்கும் போராட்டம் இது.

---

2. துரோகத்துக்குப் பரிசு

"ஜம்மு நாட்டைச் சேர்ந்த டோக்ரா ராஜ புத்திரன் குலாப் சிங் சீக்கியர்களுக்குத் துரோகமிழைத்தான். சீக்கிய ராஜ்யத்தை அபகரிப்பதில் பிரிட்டிஷார் அவனைப் பயன்படுத்திக் கொண்டார்கள். குலாப் சிங்கின் துரோகத்தால் ஒருவித தொந்தரவுமில்லாமல பிரிட்டிஷாரால் சீக்கிய தாயகத்தைக் கைப் பற்ற முடிந்தது. இந்தத் துரோகத்துக்குச் சன்மானமாக குலாப்சிங்குக்கு காஷ்மீர் கிடைத்தது.

பி. டி. பாஸு—"கிருஸ்துவ ஆட்சியின் எழுச்சி"

இந்தியாவில் 584 சமஸ்தானங்கள் இருக்கின்றன. வடக்கே காஷ்மீர் முதல் தெற்கே திருவாங்கூர் வரை தேசம் முழுவதும் சிந்திச் சிதறிக் கிடக்கின்றன. இந்த சமஸ்தான அதிபர்களைத்தான் சுதேசி மன்னர்கள் என்று சொல்கிறோம்.

மூன்றிலொரு இந்தியாவில் பத்து கோடி மக்கள் சுதேசி மன்னர்களின் ஆட்சிக் குட்பட்டிருக்கிறார்கள். ஆனால் சுதேசி மன்னர்கள் சுதந்தர ராஜாக்களல்ல, பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிபத்தியத்துக்கு கட்டுப்பட்டவர்கள். பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதியான வைஸ்ராய் தலைமையில் இயங்கும் 'அரசியல் இலாகா' தான் சமஸ்தான மன்னர்களை ஆட்டி வைக்கிறது. சமஸ்தான மன்னர்கள் உற்சவ விக்ரஹங்கள்; ஏகாதிபத்தியம் சூத்திரதாரி; சமஸ்தான மக்கள் இரட்டை அடிமைகள்.

584 சமஸ்தானங்களில் பெரிய சமஸ்தானம் காஷ்மீர். 84,471 சதுரமைல் விஸ்தீரணமுடையது.

பனிமுடிதாங்கிய ஹிமாலய பர்வதத்துக்கும், பசுமை மூடிய பாஞ்சால சமவெளிக்கு மிடையிலுள்ள இந்த நாட்டிலுள்ள ஒன்பதினுயிரம் கிராமங்களிலும் 41 நகரங்களிலும் 40 லட்சம் ஜனங்கள் வசிக்கிறுர்கள்.

விவசாயம்தான் தேசத்தின் பிரதான தொழில். 100க்கு 96 பேர் விவசாயிகள்.

காஷ்மீரிகளில் 100 க்கு 80 பேர் முஸ்லீம்கள். சீக்கியர்கள், பௌத்தர்கள், ஹிந்து பண்டிதர்கள் முதலியோரும் இருக்கிறுர்கள். ஆனல் மத உணர்ச்சி அரசியலை நிர்ணயிக்கவில்லை. இன உணர்ச்சி அனைவரையும் அணைத்து விட்டது. பொதுவாக தாய்மொழி, கலாச்சாரம், பரம்பரைப் பண்பு அவர்களை பிணைத்திருக்கிறது. "புதிய காஷ்மீர்" ஆதர்சம் அத்தனை காஷ்மீரிகளையும் ஆகர்ஷித்து அமர்க்களத்தில் அணிவகுக்கிறது.

காஷ்மீர் வடமேற்கு இந்தியாவி லிருப்பதைக் குறிப்பிட்டேன். காஷ்மீரில் இந்தியா, ருஷ்யா, சீனு ஆகிய முப்பெரும் நாடும் சந்திப்பதைக் குறிப்பிட்டால், அதன் முக்கியத்துவம் விளங்கும்.

இந்த காஷ்மீரையும் அதன் ஜனங்களையும் 75 லட்சக் ரூபாய்க்கு கிழக்கிந்திய கம்பெனியார் குலாப் சிங்குக்கு விற்றுவிட்டார்கள்!

சீக்கியர்களை அடிமைப் படுத்த குலாப்சிங் உதவினுன். காட்டிக் கொடுத்தவனுக்கு காஷ்மீர்களின் நாட்டைக்கொடுத்தார்கள் கிழக்கிந்திய கம்பெனியார்! ஆறுயிரம் மைலுக்கப்

பாலிருந்து திரை கடல் கடந்து திரவியம் தேட வந்த வியாபாரிகளுக்கு, காஷ்மீரை விற்க என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கலாம். கடைக் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது தான் ஏகாதிபத்திய 'தர்மம்'.

இந்த விற்பனைப் பத்திரம் 1846ல் அமிருதசரவில் கையெழுத்தாயிற்று. இதற்குத்தான் அமிருதசரஸ் ஒப்பந்தம் என்று பெயர்.

குலாப்சிங் தாய் நாட்டிக்குத் துரோகம் செய்தான். அவன் சந்ததியார் அதை தங்கள் குலத தொழிலாகக் கடைப் பிடித்தார்கள். அவர்கள் மூலம் காஷ்மீரில் பிரிட்டிஷ் ஆட்சி சுரண்டிக் கொழுத்துக்கொண்டு வருகிறது.

விற்பனைப் பத்திரம் கையெழுத்தாகி 100 வருஷங்களாகிவிட்டன! பல சிம்மாசனங்கள் கவிழ்ந்துவிட்டன! ஆஸ்டிரிய - ஹங்கேரி சாம்ராஜ்யம் இருந்த இடம் தெரியவில்லை. கெய்ஸர் ஒழிந்தான். "ஜாரென்னும் பேரிசைந்த பாவி"யைக்கூட லெனின் தலைமையில் நிகழ்ந்த யுகப் புரட்சி கவிழ்த்துவிட்டது. உலகம் கண்டுமிரண்ட ஹிட்லர் கூட ஒழிந்துவிட்டான். யூகஸ்லேவியாவின் மன்னன் பூடரும் இத்தாலிய மன்னன் எமானுவேலும் பொதுஜன நீதி மன்றத்தின் தண்டனையை ஏற்று நாட்டைவிட்டு ஓடிவிட்டனர்! சூரிய வம்சத்தில் வந்த "மிகாடோ" வென்று கண்கண்ட தெய்வமாகக் கருதிக் கும்பிட்டு, சேவித்தார்கள் ஜப்பானிய மக்கள்; அதே மிகாடோச் சக்கிரவர்த்தியின் சிம்மாசனத்துக்கு ஆட்டம் கண்டு விட்டது.

ஆனால், நூறாண்டுக்குப் பின்னும் 40 லட்சம் ஜனங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கலாமென்று 'டோக்ரா'

குடும்பம் நினைக்கிறது! சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் குடை நிழலில் இருப்பதால், தன்னை யாரும் அசைக்க முடியாதென்று நினைக்கிறார் மகாராஜா ஹரிசிங்! அவருக்கேற்ற சகுனியாக வந்திருக்கிறான் பிரதம மந்திரி ராமச்சந்திரகக். காஷ்மீரிகளை அட்டைபோல் உறிஞ்சி விட்டு, அவர்களை அடக்கி ஆண்டு வருகின்றனர்—பிரிட்டிஷ் படைகளின் பாதுகாப்பிலிருந்து கொண்டு!

3. சுரண்டலின் ரூபம்

காஷ்மீர் சமஸ்தானத்தின் வருமானம் 2½ கோடி ரூபாய். இந்திய சமஸ்தானங்களிலே மூன்றாவது பணக்கார சமஸ்தானம் காஷ்மீர்.

2½ கோடி ரூபாயில் மகாராஜாவின் சொந்தச் செலவுக்கு 12½ லட்சம் ரூபாய் ஒதுக்கப் படுகிறது. அரண்மனையின் தேவைகளை கவனிக்கும் இலாக்காக்களுக்கு 12½ லட்ச ரூபாய் செலவாகிறது. அரண்மனையிலுள்ளவர்களுக்கு 5 லட்ச ரூபாய் படி அளந்தாகிறது. மகாராஜாவுக்கு ஒரு 'ஜாகீர்' (ஜமீன்) இருந்ததாம். ஜாகிர்தார்கள் ராஜாவின் பிரஜைகள்; ராஜாவே ஜாகீர்தாரா யிருந்தால், ராஜாவே பிரஜையாக வேண்டுமல்லவா? அதனால் ராஜா அந்த ஜாகீரை 'துறந்து' விட்டார்! அதற்காக அவருக்கு வருஷத்துக்கு 8½ லட்ச ரூபாய் அரசாங்கம் தருகிறது! தவிர, வருமான வரி, சுங்க வரி, முதலிய வரிகள் ராஜாவிடம் வசூலானால், அதை ராஜாவுக்கு திருப்பித் தந்துவிட வேண்டும். இதன் மூலம் ராஜாவுக்கு 3 லட்ச ரூபாய் கிடைக்கும்! இதுதான் 'ராஜா வருமானம்'

ராஜாங்கத்தின் முதல் அங்கமான ராஜகுடும்பத்தின் வருமானத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

அடுத்தபடி, ராஜாங்க ராணுவத்துக்கு 77½ லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது. காஷ்மீரிகளின் ரத்தத்தில் வார்க்கப்பட்ட பணம் 77½ லட்சம் செலவழிக்கப்பட்டாலும் காஷ்மீரிகளை ராணுவத்தில் எடுத்துக் கொள்வதில்லை; காஷ்மீர் சமஸ்தான சேனையில் காஷ்மீரிருக்கு இடம் கிடையாது.

போலீஸ் இலாகாவுக்கு 15 லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

பொது ஜன நன்மையை கவனிக்கும் பொருட்டு ராஜாங்கத்தில் பல இலாக்காக்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாய முறையை அபிவிருத்தி செய்ய விவசாய இலாகா, தோட்ட இலாகா, கைத்தொழில், யந்திரத் தொழில் வளர்ச்சிக்காக தொழில் இலாகா, கால் நடைகளின் ஆரோக்கியத்தைக் கவனிக்க மிருக வைத்திய இலாகா, கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க கோவாப்ரடிவ் இலாகா ஸ்தல சுயாட்சிக்கு ஜனங்களை பக்குவப் படுத்தவும் பஞ்சாயத்து இலாகா, கிராம வாசிகளை கடைத்தேற்றுவதற்காக கிராம புனருத்தாரண இலாகா—இத்தனைக்கும் சேர்ந்து 2½ லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது. போலீஸ் இலாகா செலவில் 6ல் ஒரு மடங்கு! ராணுவச் செலவில் 31ல் ஒரு மடங்கு!! ராஜா குடும்ப செலவில் 16ல் ஒரு மடங்கு!!!

ராஜாங்கத்தில் கல்வி இலாகாவும் இருக்கிறது. 1000 ஆரம்ப பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன! 19 ஹைஸ்கூல்கள் உண்டு; பெண்களுக்கு கல்லூரிக் கல்வி போதிப்பதைப் பற்றி ராஜாக்கள் முடிவு செய்யவில்லை.

சுகாதார வசதிகளுமுண்டு. 38000 ஜனங்களுக்கு ஒரு 'டிஸ்பென்ஸரி' இருக்கிறது. தமிழ்நாட்டைப்போல் ஜனநெருக்கமுள்ள இடமென்று நினைத்துவிடாதீர்கள்! மலைப் பிரதேசத்தின் ஜனங்கள் சிதறலாகத்தான் வசிப்பார்கள். 40 லட்சம் பேருக்கும் இரண்டு ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன!

ராஜாங்கத்துக்கு அடுத்தபடியாக குட்டி ராஜாங்கங்கள் இருக்கின்றன. இவற்றை 'ஜாகீர்கள்' அல்லது ஜமீன்

கள் என்று சொல்லாம். ஆங்கிலேய சக்ரவர்த்தியின் அருளால் டோக்ரா ராஜவம்சத்துக்கு காஷ்மீரின் ராஜ்யாதிகாரம் கிடைத்ததைப் போல, ராஜாங்கத்தின் கிருபையால் ஜாகீர்தார்களுக்கு தத்தம் ஜாகீர்களில் சர்வாதிகாரமும் கிடைத்திருக்கிறது! ஜாகீர்தார்கள் நிலச்சுவான்தார்கள் மட்டுமல்ல, வியாபாரமும் அவர்கள் ஏகபோக உரிமை. விவசாயிகளின் சொத்துகளை அபகரிப்பதில் கெட்டிக்காரர்கள். போலீஸ், ஜெயில், கோர்ட் எல்லாம் அவர்கள் கையிலிருக்கின்றன. அவர்களுடைய ஆட்சி முறையை ஆட்சேபித்து "இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்" தான்!

வரி வசூலிப்பவனும் அவனே! சட்டம் போடுபவனும் அவனே! சட்டத்தை உடைப்பதும் அவனே! நியாயம் விசாரிப்பவனும் அவனே! நிரபராதிகளை சிறையில் போடுவதும் அவனே! இத்தகைய 'சர்வவல்லமை' பொருந்திய பிறவியை வேறெங்கும் காணமுடியாது.

விவசாயிகளைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ராஜ குடும்பத்துக்கும் அதன் எஜமானனான ஏகாதிபத்தியத்துக்கும் உழைத்துப் போட்டுவிட்டு, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' யென்று பஞ்சத்துக்கும் பிணிக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு 'காலம் தள்ள' வேண்டும்! அவர்களுடைய சராசரி வருஷ வருமானம் 11 ரூபாய்!

100க்கு 80 பேரிருக்கும் முஸ்லீம் ஜனத்தொகையில், படித்தவர்கள் 100க்கு 4 பேர்தானென்றால், படித்தவர்களின் எண்ணிக்கையை நீங்கள் விரல்விட்டு எண்ணிவிடலாம்!

குட்டி சர்வாதிகாரிகளான ஜாகீர்தார்கள் அதற்குமேல் மகாராஜா, அவருடைய ஊழல்பிடித்த நிர்வாகம், அதற்கும் மேல் அன்னிய ஆட்சி! இந்த தாங்க முடியாத சுமையைத் தூக்கி, முதுகெலும்பு ஒடிந்து, முகம் வெளுத்து, கண் பிதுங்கிவிட்டது! போதும் போதாதற்கு புதிய சுமை வேறு அவனுக்கு வந்துவிட்டது. காஷ்மீரின் தொழில் வளர்ச்சிக்கு காஷ்மீர்கள் திட்டம் போட்டு வேலை செய்வதற்குப் பதிலாக, டாட்டாக்களிடம் மகாராஜா காஷ்மீரின் தொழிலபிவிருத்தி செய்யும் உரிமையை விற்றுவிட்டார்! காஷ்மீருக்கு புதிய மன்னன் - அசுரன் ஒருவன் வரப்போகிறான்! அது தான் டாட்டா முதலாளித்துவம். 1846ல் குலாப் சிங் வந்தான்; 1946ல் டாட்டா வருகிறார்!

இந்த அக்கிரம ஆட்சி முறையை 1946ல் ஜனங்கள் அனுமதிப்பார்களா?

அதுவும், காஷ்மீரிகள் அனுமதிப்பார்களா? அவர்கள் எல்லையைத் தாண்டினால், அதோ கூப்பிடு தூரத்தில், செங்கொடி அரசுபுரியும் மத்திய ஆசியாவில், ஜனங்கள் சுதந்திர சுபீட்ச வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழும்போது, பாமீர் மலைக்கிப்பாலுள்ள காஷ்மீரிகள் மாத்திரம் அடிமைகளாய் காலம் தள்ளுவார்களா?

இந்தப் புறத்தில் பட்டாணியர் நாட்டிலும், பாஞ்சால தேசத்திலும் பொது ஜன எழுச்சி காட்டாற்று வெள்ளமாகப் பெருகி, ஏகாதிபத்திய நெடு மரங்களை வேரோடு பெயர்த்துக்கொண்டு போகும் கட்டத்திலிருக்கும்போது, காஷ்மீரிகளின் தோட்கள் தினவெடுக்காதா? வதனங்களில் ரோஷம் அரும்பாதா?

காஷ்மீரிகள் எழுந்து விட்டார்கள். 40 லட்சம் பேரும் எழுந்து விட்டார்கள்.

"அமிருதசரஸ் விற்பனைப் பத்திரத்தைக் கிழித்தெறி!"

"காஷ்மீரை விட்டு வெளியேறு!" என்ற கோஷங்கள் மலை யுச்சிகளிலும், பள்ளத் தாக்குகளிலும் எதிரொலி செய்து பேரொலியாக மாறுகின்றன! அந்தப் பேரொலியில் தனது சாவு மணியைக் கண்ட அதிகார. வர்க்கம் கதி கலங்கி நிற்கிறது!

4. விடுதலை இயக்கம்

தியாகிகள் தினம்

பதினைந்து வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம் அது. 1931ம் வருஷம் ஜூலை மாதம் 13ம் தேதி 22 தேச பக்தர்களின் உயிர்த் தியாகம், விடுதலை இயக்கத்துக்கு அஸ்திவாரமிட்டது.

ஸ்ரீநகர் சிறைக்கு வெளியே அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அப்துல் காதர் என்ற பட்டாணிய தேசபக்தன் மது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மகாராஜாவின் கொடுங்கோலாட்சியைக் கண்டித்துப் பேசிய தீரனின் முகத்தை, தரிசனம் செய்ய திரள் திரளாக காஷ்மீரிகள் கோர்ட்டில் கூடினார்கள். இதைப் பார்த்த அரசாங்கம் விசாரணையை சிறைக்குள்ளேயே ரகசியமாக நடத்தத் தீர்மானித்தது. நாலாயிரம் ஜனங்கள் கூடி அதை ஆட்சேபித்தனர்.

இரத்த வெறி கொண்ட கவர்னர் வந்தான் - உத்திரவிட்டான் - துப்பாக்கிகள் தாக்கின.

ஆனால் குண்டுக்குப் பயந்து குண்டோட்டம் குதிரையோட்டமென்றோடும் காலம் மலையேறி விட்டது! அது 1931. பக்கத்தில் பட்டாணியர்கள் நடத்திய வீரப் போராட்டத்தைப் பற்றிக் கேட்டு காஷ்மீரிகள் துடித்துக் கொண்டிருந்தனர்; பேஷாவர் நகரில் பட்டாணிய சத்தியாக்கிரஹிகளை சுட மறுத்த தாகூர் சந்திர சிங்கின் கார்வாலி பட்டாளத்தைப் பற்றிக்கேள்விப்பட்டு அவர்களுடைய சாவுக்கு மஞ்சாத் தீரத்தை உதாரணமாகக் கொண்டு ஆர்த்தெழுந்தனர் காஷ்மீரிகள்! ஜூலை மாதம் 13ம் தேதி

காஷ்மீரிகள் ஆடுகளைப் போல ஓடவில்லை. மனிதர்களைப் போல நிமிர்ந்து நின்றார்கள். அச்சத்தைப் பார்த்து நகைத்தார்கள். போலீஸ் லாரிகள் தீக்கிரையாகின ; சிறைக் கதவுகள் தகர்ந்தன.

தியாகிகளின் உடைகள்-குருதியில் ஊறிய உடைகள் போராட்டத்தின் கொடிகளாகி விட்டன! தியாகிகளைக் கொண்டுபோய் அடக்கம் செய்ய அனைவரும் திரண்டனர். தியாகிகளின் மீது ஆணைவைத்து காஷ்மீரின் விடுதலைக்காக சர்வ பரித்தியாகம் செய்து போராடச் சபத மெடுத்தனர் தேசிய இயக்கம் பிறந்து விட்டது!

கடந்த பதினைந்து வருஷங்களில் தேசிய இயக்கம் தளிர்விட்டுத் துளிர்த்து, கிளை விட்டுத் தழைத்து, பருத்துப் படர்ந்து, விழுதுகள் விட்டு, ஊழிக்காற்றே அடித்தாலும் அசைக்க முடியாத விருட்சமாக வளர்ந்து விட்டது. ஜாகீர்தார்களையும் ராஜாங்கத்தையும் எதிர்த்து பன்முறை போராடி, தியாக நெருப்பிலே புடம்போட்ட ஸ்தாபனமாக தேசிய மகாநாடு உருவெடுத்திருக்கிறது. இந்த தேசிய மகாநாட்டின் சிற்பிதான் ஷேக் அப்துல்லா. காஷ்மீரிகள் அப்துல்லாவை நேசிப்பதற்கு ஈடாக, காந்திஜியை இந்தியர்கள் நேசிப்பதைத்தான் சொல்ல முடியும்!

தேசிய மகாநாடு முதலில் "முஸ்லீம் மகாநாடு" என்ற பெயரைக் கொண்டிருந்தது. ஆனால் அதன் தன்மை ஆரம்ப முதல் தேசியமாகவே இருந்தது. 1934ல் அதன் பெயர் "அகில காஷ்மீர், ஜம்மு தேசிய மகாநாடு" என்று மாற்றியமைக்கப்பட்டது. காஷ்மீர் பண்டிதர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் அனைவரும் தேசிய மகாநாட்டில் திரண்டு நிற்கின்றனர்.

காஷ்மீர் மக்கள் நடத்திய முதல் போராட்டத்தின்! பின் 1934ல் காஷ்மீருக்கு ஒரு அரசியல் சட்டம் வழங்கப் பட்டது. 100க்கு 3 பேருக்குத் தான் வோட்டுரிமை வழங் கப்பட்டது. பணக்காரர்களுக்கும் படிப்பாளிகளுக்கும் தான் வோட். 100க்கு 95 பேருக்குச் சொத்துமில்லை, படிப்புமில்லை.

தவிர, 15 ஜாகீர்தார்கள் ஒரு பிரதிநிதி அனுப்புவார் கள்; 3 லட்சம் மக்கள் கொண்ட முஸாபராபாத் தொகுதி யும் ஒரு பிரதிநிதியைத் தான் அனுப்பமுடியும்! இவர்களும் 33 பேரைத்தான் தேர்ந்தெடுக்க முடியும்! 75 பேர் கொண்ட சட்டசபையில் 46 பேர் ராஜாவால் நியமிக்கப்படு வார்கள்.

நிர்வாகத்துக்கும் சட்டசபைக்கும் சம்பந்தமில்லை. நமது மகாணங்களில் இருப்பதுபோல, சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபை கிடையாது. நிர்வாகம் மகா ராஜாவுக்குத் தான் ஜவாப்தாரி! மகாராஜா வைஸ்ராய்க்கு ஜவாப்தாரி! யதேச்சாதிகாரத்தை மூடி மறைத்து வைக்க சட்டசபை ஒரு முகமூடி! அவ்வளவுதான்.

1944ல் மகாராஜா ஒரு பிரகடனம் வெளியிட்டார். சட்டசபையிலுள்ள உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர் களை அரசாங்க நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்ள தாம் தயா ராயிருப்பதாகக் கூறினர்!

இது பொறுப்பாட்சியாகாது. ஓரிரண்டு ஜனப் பிரதி நிதிகள நிர்வாகத்துக்குப் போய் ஒன்றும் செய்துவிட முடி யாது. அவர்களும் மகாராஜாவுக்குப் பொறுப்பாக வேலை செய்ய வேண்டும்.

எனினும் "வறுமைப் பசி, அடிமைத்தனம் ஆகிய பிரச்னைகளால் மோதுண்டு, ஜனங்களின் உயிர்கள் துடித்துக் கொண்டிருக்கு மிந்த சமயத்தில் அரசாங்கக் கப்பலை ஒழுங்கான வழியில் நடத்தி ஜனங்களுக்கு உதவி செய்ய இது ஒரு சந்தர்ப்பம் என்று தேசீய மகாநாட்டுத் தலைவர்கள் கருதினார்கள். அதனால் மீர்ஜா முகமத் அப்ஸல் பேக் என்ற தலைவர் மந்திரி சபையில் சேர்ந்தார். "இரட்டை ஆட்சி" வந்துவிட்டதாக பிரமாதமாக விளம்பரப்படுத்தப் பட்டது.

தேசீய மகாநாட்டுத் தலைவரை கைதூக்கியாக அடிக்க ராஜாவும் அவருடைய கைக்கூலிகளும் படாதபாடு பட்டனர். தங்கள் வலையில் தேசீய மகாநாடு சிக்கி விட்டதென்றெண்ணினார்கள். பழைய ஆட்சியை தேசீயத் தலைவர்கள் மூலமாகவே நடத்திவிடலாமென்று திட்டம் போட்டனர்.

முனிசிபாலிடிகளை ஜனநாயக ரீதியில் நடத்துவதற்கு பேக் ஒரு மசோதா தயாரித்தார். அதை குப்பைத் தொட்டியில் போட்டார் மகாராஜா. பேக்குக்குத் தெரியாமலேயே சட்டங்கள் பிறப்பித்தார். ஜனுப் பேக்கை சட்டசபைக் கனுப்பிய தொகுதியிலேயே அவருக்குத் தெரியாமல் 144 போடப்பட்டது. அதை நீக்க அவருக்கு அதிகாரமில்லை.

யுத்தம் முடிந்ததும், பிரிட்டிஷ் சர்க்கார் புதிய அரசியல் மாறுதல்களை இந்தியாவில் கொண்டு வருமென்ற தகவல் ராஜாவுக் கெட்டியது. இங்கே தேசீய மகாநாட்டின் பலம் பெருகிக்கொண்டே வருகிறது. அதன் தலைமையை எந்த வலையிலும் வீழ்த்த முடியவில்லை. புதிய மாறுதல்கள் வருவதற்கு முன்னலேயே தேசீய இயக்கத்தை நசுக்கிவிட வேண்டுமென்று ஹாரிசிங்கும் கக்கும் தீர்

மானித்து விட்டார்கள். மார்ச் மாதத்தில் பேக் வெளியேறினர். மே மாதத்தில் தேசீய இயக்கத்தின் மீது தாக்குதல் வந்தது. எல்லாம் முன் கூட்டியே வகுக்கப் பட்ட திட்டப்படிதான். "தேசீய மகாநாட்டை ஒழித்துக் கட்டுவதற்காக கடந்த 11 மாதங்களாக தயாரிப்புகள் நடந்து வந்திருக்கின்றன" என்று பண்டித நேரு கூறுகிறார்.

மே மாதம் 20-ந் தேதி ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டார். 1942 ஆகஸ்ட் மாதம் தேசத் தலைவர்கள் கைது செய்துவிட்டு இந்திய மக்கள்மீது ஏகாதிபத்தியம் மின்னல் தாக்குதல் நடத்தியதை காஷ்மீர் நிர்வாகம் 'காப்பி'யடித்தது. கடிவாளமிழந்த பேயக் குதிரைகளைப் போல டோக்ரா துருப்புகள் காஷ்மீர் தெருக்களில் துவம்சம் செய்யத் தொடங்கின.

---

5. பரிபூரண சுதந்திரப் போராட்டம்

தாக்கியது யார்?

காஷ்மீரின் எதிர்காலத்தை காஷ்மீர் மக்கள்தான் நிர்ணயிக்க வேண்டுமென்று தேசிய மகாநாடு கோஷித்தது. காஷ்மீரை ஆள்வதற்கு மகாராஜாவுக்கு எவ்வித உரிமையுமில்லையென்றும், காஷ்மீரில் பிரிட்டிஷாருக்கு வேலையில்லையென்றும் தேசிய மகாநாடு பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு சமர்ப்பித்த யாதாஸ்தில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பிரகடனப்படுத்தியது. மன்னராட்சி வேண்டுமா வேண்டாமா வென்று பொது ஜனங்களிடம் வோட்டெடுத்துப் பார்க்கலாமென்று 'காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா சவால் விடுத்தார்!

முடிமன்னன் தொடை நடுங்கியது; லக்ஷக்கணக்கான ரூபாய் வருமானமும் கேளிக்கைகளும் கோலாகலங்களும் நின்று போய்விடுமே!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கோ ஜீவ நாடியே நின்று விட்டதுபோ லிருந்தது. சமஸ்தானங்களில் தானே அதன் ஜீவ ரகசியத்தை வைத்திருக்கத் திட்டமிட்டிருக்கிறது.

தவிர, இதர சமஸ்தானங்களைவிட காஷ்மீர் பன்மடங்கு முக்கியத்துவம் வாங்கியது. ருஷ்ய எல்லையிலிருக்கிறது. ஜில்ஜிட் என்ற பிரிட்டிஷ் ராணுவ கேந்திரம் இருப்பதும் காஷ்மீரில்தான். ஸோஷியலிஸ்ட் ஸோவியத் யூனியனை எதிர்த்து மூன்றாவது உலக யுத்தம் நடத்துவதற்காக ராணுவ, ராஜதந்திர ஏற்பாடுகள் செய்துவரும் பிரிட்

டிஷ் ஆட்சி ஜில்ஜிட்டையும் காஷ்மீரையும் விட்டுவிட முடியுமா? காஷ்மீரில் சுதந்திர ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால், அது தம் ஏகாதிபத்திய யுத்தத்தில் பீரங்கித் தீனியாவதற்கு காஷ்மீரிகள் சம்மதிப்பார்களா? அதனால், காஷ்மீர் பொதுஜன இயக்கத்தை அழித்துவிட ஏகாதிபத்தியம் திட்டமிட்டது—பண்டித நேருவுக்குக் கூட 'பாடம் கற்பிக்க' அது தயங்கவில்லை.

ஆனால் காஷ்மீர்கள் நிலைகுலைந்து, மனமொடிந்து விடவில்லை. வஜ்ர நெஞ்சத்துடன் வெஞ்சமர் புரிகிறார்கள்.

மே மாதம் 20-ம் தேதி போராட்டம் துவங்கிய தினத்தில் மாத்திரம், 20 இடங்களில் ஜனங்களுக்கும் ராணுவத்துக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

படையெடுக்கும் அன்னியப் படைகள் எவ்விதம் ஒரு நாட்டை ஆக்கிரமிக்குமோ, அதைப்போல் பிரிட்டிஷ் இந்திய படைகள் காஷ்மீரைக் கைப்பற்றின. ராணுவ ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது. "பார்த்ததும் சுடு" என்பது சோல்ஜர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை.

"மகாராஜாவுக்கு ஜே"! கோஷிக்கும்படி துப்பாக்கி சனியனைக் காட்டி சோல்ஜர்கள் மிரட்டினார்கள். ஆனால் காஷ்மீர்கள் துப்பாக்கி சனியனுக்குப் பயப்படவில்லை. பத்து வயது நிறையாத பச்சிளம் பாலன் ஒருவன் முஷ்டி உயர்த்தி துப்பாக்கிச்சனியனுடன் சமர்செய்து "காஷ்மீரை விட்டு வெளியேறு" என்று கோஷித்துக்கொண்டே வீர சுவர்க்கம் எய்தினான். காஷ்மீர்ச் சிறுவர் சிறுமிகளின் 'வானர சைன்யம்'கூட காஷ்மீர் விடுதலைக்காகப் போராடுகிறது!

முஸ்லிம் மாதர்கள் பர்தாவில் மறைந்திருந்த பெண்மணிகள், நாணத்தையும் கூச்சத்தையும் உதறித் தள்ளிவிட்டு, வீராங்கனைகளாக நின்று சுக்கின் பயங்கர நாயர்களைக் கருவறுக்கப் போராடுகிறார்கள்.

ஜோனி ஒரு தொழிலாளியின் மனைவி. 1931 போராட்டத்தில் ஒரு போலீஸ்காரனின் துப்பாக்கியைப் பிடுங்கி ஒடித்துவிட்டு, அவனைக் குதிரையிலிருந்து கீழிறக்கிய வீராங்கனை. மாதர் படையைத் திரட்டி, குதிரைப் படையை எதிர்த்துப் போரிட்டாள்.

அலிலி தொழிலாளி வர்க்க ஸ்திரீ-வீரமை. 1938-ல் காஷ்மீரைக் குலுக்கிய மாதர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினாள். பிரதம மந்திரி முதலிய டோக்ரா அதிகாரிகளின் கொடும்பாவி கட்டி ஆர்ப்பாட்டங்கள் நடத்திய வீராங்கனை.

ஸைனுல் தேசிய மகாநாட்டுத் தலைவர் ஷேக் என்பவர் குமாரி இன்றைய இயக்கத்தில் தலைமை தாங்கிப் போராடுகிறாள்.

ஜோனி, அலிலி, ஜைனலி 1931, 38, 46.........
இவர்கள்தான் காஷ்மீரின் மாதர்கள். அடுப்பங் கரையிலிருந்து அமர்க்களத்துக்கு வந்துவிட்டார்கள். தத்தம் வீட்டிலும் தெருவிலும் சுபிட்சம் நிறைந்த புதிய வாழ்க்கையை அளிக்கும் புதிய காஷ்மீருக்காகப் போராட, ராஜாக்கள், ஜாகிர்தார்கள் ஒழிந்த புதிய காஷ்மீருக்காகப் போராட, எல்லோருக்கும் வேலையும் உணவும் வீடும் கல்வியும் சுகாதாரமும் அளிக்கும் புதிய காஷ்மீரைத் தங்கள் சொந்தக் கைகளால் நிறுவிடக்க.

தொழிலாளர்களைப்பற்றி சொல்லவேண்டியதில்லை முன்னணியில் பார்க்கலாம் அவர்களை. பிற்போக்காக இருந்த பிரதேசங்களில்கூட புரட்சி ஆக்கம் தலைதூக்கி விட்டது.

புதிய புதிய பொதுஜன சைனியங்கள் தோன்றுகின்றன— போராட்டத்தை நீடித்து நடத்த.

போரின் பலத்தைக் கண்டு பதறும் பிற்போக்காளர்கள் பூச்சாண்டி காட்டுவதில் இறங்குகின்றனர்.

காஷ்மீர் ராஜா ஹிந்துவாயிருப்பதால், ஹிந்து ராஜ்யத்தை எதிர்த்து முஸ்லீம்கள் போராடுவதாக வகுப்புவாதப் பூச்சாண்டி காட்டினார்கள்! ஆனால், அது பலிக்கவில்லை. ராஜா ஹிந்துவாயிருந்தாலும் சரி, முஸ்லீமாயிருந்தாலும் சரி, ராஜாவென்ற பொம்மையை ஆட்டிவைப்பது ஏகாதிபத்தியம் என்பதை எல்லோரும் உணர்வார்கள்!

ஹைதராபாத் பக்களில் பெரும்பான்மையோர் ஹிந்துக்கள். சமஸ்தானாதிபதி முஸ்லீம்-நிஜாம். நிஜாமை எதிர்த்து ஜனங்கள் விடுதலைக்காகப் போரிட்டால், அதை முஸ்லீம் எதிர்ப்பு ஹிந்து முயற்சி என்று சொல்வது எப்படி அடாத அவதூறாகுமோ, அதே போலத்தான் காஷ்மீரிகளின் விடுதலைப் போராட்டத்தை வகுப்புவாதத்தின் பேரால் தண்டிப்பது!

ஹிந்து ராஜாவுக்கும் பிரஜாவுக்கும் நடக்கும் போராட்டம். ராஜாவின் முடியாட்சி பொறுப்பற்ற யதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து ஜனங்களின் ஆட்சிக்காக பிரஜா ராஜ்யத்துக்காக ஜனங்கள் போராடுகிறார்கள்.

மகாராஜாவின் கைக்கூலிகள் கம்யூனிஸ்ட் பூச்சாண்டியையும் கிளப்பிவிட்டனர்

"காஷ்மீரை விட்டு வெளியேறு" என்ற கோஷம் அன்னியநாட்டினரின் தூண்டுதலால் உருவானது. அன்னியரின் தூண்டுதலால், கம்யூனிஸ்ட்கள் ஷேக் அப்துல்

லாவை ஒரு ஆயுதமாக உபயோகிக்கிறார்கள்.....சோவியத் ரஷ்யா செய்யும் சூழ்ச்சி இது" என்று "காஷ்மீர்டைம்ஸ்" என்ற கைக்கூலிப் பத்திரிகை எழுதியது. முஸ்லீம் லீகின் செய்தி ஸ்தாபனமான ஓரியண்ட்பிரஸூம் இதே அண்டப் புளுகை அஞ்சல் செய்தது.

இந்தப் பிரசாரத்தின் உண்மையை விசாரிக்குமாறு காஷ்மீர் சர்க்காருக்கு இந்திய சர்க்கார் கட்டளை பிறப்பித்திருக்கிறது. பண்டிதநேருவையே இந்தப் பூச்சாண்டி காட்டி, பயமுறுத்தி விடலாமென்று ஏகாதிபத்தியவாதிகள் முயற்சித்தார்கள். ஆனால் அது பலிக்கவில்லை.

பூச்சாண்டிகளால் காஷ்மீரிகளின் போராட்டத்தை உடைத்துவிடமுடியாது. காஷ்மீர் ஹிந்துக்களுக்கு மகாராஜாவைத் தெரியும்; தேசீய மகாநாட்டையும் தெரியும். அதேபோல, காஷ்மீரிகளுக்கு கம்யூனிஸ்ட்களை நன்குதெரியும். காஷ்மீர் தேசீய இயக்கத்தில் கம்யூனிஷ்ட்கள் எல்லோருடைய நன் மதிப்பையும் பெற்று பணியாற்றுகிறார்கள். அடக்குமுறையும் அவதூறும் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கமுடியாது. ஏமரி இந்திய விடுதலை இயக்கத்தை நசுக்க அந்த இரு ஆயுதங்களைத்தான் நம்பினான். ஆனால் சரித்திரம் அவனைத் தண்டித்துவிட்டது. பார்லிமெண்ட் இடமளிக்க மறுத்தது. அவன் குமாரன் தேசத்துரோக குற்றத்துக்குத் தூக்குமேடை ஏறினான்.

ஹாரிசிங்கும் கக்கும் ஷேக் அப்துல்லாவைத் தண்டிக்கப் பார்ப்பது ஏமரி காந்திஜியை தண்டிக்கத் திட்டம் போட்டதைப் போலத்தான்! காஷ்மீர் மக்களின் நீதிமன்றம் ஹாரிசிங்-கக் கும்பலுக்குத் தண்டனை விதித்துவிட்டது.

ஜனங்களின் தண்டனையிலிருந்து அவர்கள் தப்ப முடியாது!

6. பிரிட்டிஷ் திட்டம்

பத்துக்கோடி சமஸ்தான மக்களுடைய போராட்டத்தின் முன்னறிவிப்பு காஷ்மீர். 584 யதேச்சாதிகாரக் கோட்டைகளை உடைத்தெறிய நடத்தும் அந்தப் போராட்டத்தை இந்தியர்கள் அனைவரும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்று சமஸ்தான மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு பிரத்தியேக அரசியல் முக்கியத்துவம் இருக்கிறது. சமஸ்தானாதிபதிகளை நம்பித்தான் பிரிட்டிஷார் தங்கள் எதிர்கால ஆதிக்கத் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள்.

யுத்தம் முடிந்த பின், இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் புதிய கட்டத்தை அடைந்தது இந்தியாவை அடக்கி வைத்திருப்பதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தயாரித்து வைத்திருந்த ஆயுதமே ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது. கடற்படை வீரர்களின் போராட்டமும், அவர்களுக்கு ஆதரவாக ஆகாயப்படை வீரர்களும் காலாட்படைகளும் நடத்திய ஆர்ப்பாட்டங்களும், தேச சரித்திரத்தில் புதிய அத்தியாயத்தை எழுதின. பம்பாய், கல்கத்தா, டெல்லி, கராச்சி, சென்னை, திருச்சி, மதுரை முதலிய நகரங்களில் நடந்த ஹர்த்தால்களும், சர்வஜன அணிவகுப்புகளும் ஏகாதிபத்தியத்தின் மரணதசையைச் சுட்டிக்காட்டின. கட்சித் தலைவர்கள் பரஸ்பரம் தூஷித்துநின்ற போதிலும், மூவர்ணக்கொடி, பச்சைக் கொடி, செங்கொடி மூன்றையும் தாங்கிக்கொண்டு காங்கிரஸ், லீக் பொதுமக்களும் தொழிலாளர்களும் ஒன்று திரண்டு பிரிட்டன் ஆதிக்கத்தை எதிர்த்து சமர்செய்ய வந்தனர். பழைய முறையில்

இனி இந்தியாவில் ஆதிக்கம் வகிக்க முடியாதென்பதை ஏகாதிபத்தியம் உணர்ந்தது.

அதே சமயத்தில் தேசிய முன்னணியிலிருந்த இரு பலவீனங்களையும் கண்டது.

(1) பம்பாய் மக்களும் கடற்படை வீரர்களும் போராடும்போது, அந்தப் போராட்டத்தை ஸர்தாரபடேல் கண்டித்தார். காங்கிரஸ் தலைவர் ஆஸாதும் பொதுஜன ஆர்ப்பாட்டங்களை நடத்தக் கூடாதென்றார். பம்பாய் ஹிந்து முஸ்லீம் ஐக்கியப் போராட்டத்தைப் போற்றவேண்டிய மகாத்மாஜிகூட "அராஜக ஆட்சியில் கொண்டுவிடும்" என்று எச்சரித்தார். லீக தலைமையும் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. அதுமாத்திரமல்ல. பணமூட்டைகளும் ஜமீன்தார்களும் இருகட்சிகளிலும் புகுந்துகொண்டு வந்தன.

(2) ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதை இரு கட்சித் தலைமைகளும் ஆதரிக்க மறுத்தன; ஆனால் ஒருவருக்கொருவர் எதிர்த்து தத்தம் பரிவாரங்களை தட்டியெழுப்பினுர்கள். காங்கிரஸ் லீக் பொதுமக்களிடையே வேற்றுமை விஷம் பரவியது.

இந்த இரண்டு பலவீனங்களின் அடிப்படையில் புதிய ஆதிக்கத் திட்டத்தை வகுத்தார்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள். சுதந்திரம் தரப்போவதாகச் சொல்லிவிட்டு காங்கிரஸ், லீக் தலைவர்களுடன் பேசி, காங்கிரஸ் லீக் தலைமைகளின் "தீரா வேற்றுமை"யை உலகத்துக்கு அம்பலப்படுத்தினுர்கள். அதன் பின் மத்தியஸ்தர் தீர்ப்பொன்றும் வெளியிட்டார்கள். இந்தத் தீர்ப்பைத்தான் இருகட்சிகளும் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

இரு பூனைகள் அப்பத்தைப் பங்கு போட்டுக்கொள்ள முடியாமல், குரங்கிடம் மத்தியஸ்தத்துக்குப் போன கதையைத் தமிழ் நாட்டில் குழந்தைகூட அறியும். இந்த சர்வ சாதாரண படிப்பினையை நம் தலைவர்கள் உணராதலால், பிரிட்டிஷாரின் குரங்கு மத்தியஸ்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதன் விளைவாக

(1) இடைக்கால, ஐ. ஸி, எஸ். சர்க்கார் டெல்லியில் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ்—லீக் சர்க்கார் ஏற்பட்டாலும், வேவல் பிரபுவிடம் விசேஷ அதிகாரம் இருக்கும். மைனாரிட்டி பிரதிநிதிகள் வேவலுக்கு வேண்டியவர்களாக வருவார்கள்.

(2) பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறமாட்டா. இந்திய மக்களை அடக்குவதற்குப் புதுப் புது திட்டங்கள் போட்டு வருவார்கள் சேனாதிபதி ஆகின்லேக்கும் இந்திய சேனையின் பிரிட்டிஷ் ஆபீஸர்களும்.

(3) பிரிட்டனுக்கு இந்தியா கடன்கொடுக்க வேண்டுமென்ற மோசடியை எதிர்த்து வந்தோம் நாம். யுத்த காலத்தில், நாம் கஷ்டப்பட்ட காலத்தில், அந்தக் கடனை கறந்துகொண்டதுடன் நமக்குக் கடனாளியாகிவிட்டார்கள். ஆனால் இந்த 1400 கோடி ரூ. சொச்சக் கடனை ஈடுசெய்ய உடனடியாய் பிரிட்டன் வகை செய்யாது.

(4) மாகாண சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட "அரசியல் நிர்ணயசபை" கூடும். மாகாணங்கள் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டாலும் கட்டாயமாக, மந்திரிகள் வகுத்திருக்கும் தொகுதி வட்டங்களில்தான் சேர வேண்டும். ஹிந்து முஸ்லீம் அரசியல் பேதங்களை உறு

திப்படுத்தும் யோசனை இது. ஹிந்து முஸ்லீம் தகராறு போதாதென்று, பஞ்சாபி - பட்டாணி, பஞ்சாபி முஸ்லீம், பஞ்சாபிசீக், ஸிந்தி - பஞ்சாபி வங்காள அஸ்ஸாமி என்ற புதிய இனத் தகராறுகளை உற்பத்தி செய்யும் திட்டமிது. இதனால் அரசியல் நிர்ணய சபையில் இடைவிடா நெருக்கடிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும்.

(5) இந்தச் சண்டைகளின் நடுவே ஏகாதிபத்தியம் தன் திட்டத்தை நிறைவேற்ற தனது கைக் கூலிகளை அ. நி. சபைக்கு அனுப்பவேண்டுமே! அதிர்ஷ்ட வசமாக காங்கிரஸ் ஜாப்தாவில் பொப்பிலியும் குமாரராஜாவும் டீஸவுஸாவும் பர்த்வான் மகாராஜாவும் சியாம்பிரஸாத் முக்கர்ஜியும் வருவார்கள். லீக் ஜாப்தாவில் நூன்களும் இஸ்பஹானிகளும் கான்பகதூர்களும் வருவார்கள். இருந்தாலும் அவர்கள் போதுமா? அதனால் சமஸ்தானாதிபதிகளுக்கு 289 ஸ்தானங்கள் கொண்ட அ. நி. சபையில் 93 ஸ்தானங்கள் அளித்தது! இந்த அரசியல் நிர்ணயசபை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ளக் கூடிய புது அரசியலை தயாரிக்கவேண்டும்.

சமஸ்தான மக்களுக்கு அ. நி. சபையில் இடம் கிடையாது. பிரிட்டிஷ் மந்திரிகள் சமஸ்தான பிரஜைகளின் பிரதிநிதிகளை கண்ணெடுத்தும்கூட பார்க்க மறுத்தார்கள்—சமஸ்தானாதிபதிகளோ கேந்திர ஸ்தானம் வகித்தார்கள்.

ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம்படையாய் வேலை செய்ய சமஷ்தானாதிபதிகள் மறுக்கவில்லை. பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு அவர்கள் சமர்ப்பித்த யாதாஸ்தை அனுபக்

தத்தில் கொடுக்கிறேன். கவனமாகப் படித்தால் பிரிட்டிஷ்—சுதேசி மன்னர்கள் சதி வெள்ளிடை மலையாக விளங்கும்.

பிரிட்டிஷ் இந்தியா சுயராஜ்யமோ சுயாட்சியோ அடைந்தால், அவர்கள் குறுக்கே நிற்கப்போவதில்லையாம்! என்ன தாராள சிந்தை! தேசபக்தி!!

ஆனால் அவர்களுக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்களின் விளைவாக இன்று பிரிட்டிஷ் சர்க்காரிடம் இருக்கும் ஆதிபத்திய உரிமையை—சமஸ்தானங்களிலே தலையிடும் ஆதிபத்திய உரிமையை—ரத்து செய்து விடவேண்டுமாம்!

சமஸ்தானாதிபதிகள் புரட்சிக்காரர்களாக மாறிவிட்டார்களா? ஏகாதிபத்தியத்தினிடமிருந்து கத்தரித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்களே!

இல்லை! பிரிட்டிஷ் இந்தியாவில் சுயராஜ்யம் வந்த பின், பிரிட்டிஷ் சர்க்கார் நேரடியாக சமஸ்தானங்களில் தலையிட முடியுமா? முடியாது. அந்த அக்கிரமத்தை இந்தியா அனுமதிக்காது, உலகம் ஆதரிக்காது.

நியாயமாக ஆதிபத்திய அதிகாரத்தை இந்திய சர்க்காருக்கு மாற்றிவிட வேண்டும். ஆனால் இந்திய சர்க்கார், சுதேசி சர்க்கார், சமஸ்தானாதிபதிகளின் யதேச்சாதிகாரத்தை அனுமதிக்காதல்லவா? அதனால்தான் சுதேசி மன்னர்கள் ஆதிபத்திய அதிகாரம் மாற்றப்படுவதை எதிர்க்கிறார்கள். பிரிட்டிஷ் மகுடாதிபதிக்கே உரிய அந்தப் புனிதமான, யதோக்தமான உரிமை மாற்றப்படக்கூடிய லோகாயிதவஸ்து அல்லவாம்! சட்டப்படி பார்த்தாலும், இது பொய். கிழக்கிந்திய கம்பெனியாரிடம் இருந்த ஆதிபத்திய

அதிகாரம்தானே பிரிட்டிஷ் சர்க்காருக்கு மாற்றப்பட்டது! பிரிட்டிஷ் சர்க்கார் அதை இந்திய சர்க்காருக்கு மாற்றவில்லையா? இந்த உரிமைகளை நிறைவேற்றும் அரசியல் இலாகாவுக்காக இந்திய சர்க்கார் பணம் செலவழிக்கவில்லையா?

ஆனால் பிரிட்டிஷ் மந்திரிகள் மன்னர்களின் வாதத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஏன்? சமஸ்தானாதிபதி ஆட்சி நீடித்தால், அவர்களுக்குத் தானே நல்லது. சமஸ்தான மக்களால் வெறுக்கப்பட்ட, இந்திய மக்களால் வெறுக்கப்பட்ட யதேச்சாதிகாரம் நீடிக்கவேண்டுமானால், பிரிட்டிஷ் பாதுகாப்பில்தானே முடியும்! அதனால்தான் அவர்கள் அதை வரவேற்றார்கள்.

(2) சமஸ்தானங்களின் உள்நாட்டு விவகாரங்களில் யாரும் தலையிடக்கூடாது. பண்டித நேரு சமஷ்டி சர்க்காரின் பிரதமராயிருந்தாலும், காஷ்மீருக்குப் போய் மக்களை ஆதரித்தால், அவரைக் கைது செய்வார் மகாராஜா! வேவல் இடைக்கால சர்க்காரால் இடம்பெற்ற நேருதானே ஜூன் மாதம் கஷ்மீர் கைதியானார்! பிரிட்டிஷாரின் பலத்தை நம்பி அவர்கள் செய்கிறார்கள்.

(3) சமஸ்தானங்களில் ஜனப் பிரதிநிதிகள் சபைக்கு பொறுப்பான ஆட்சிமுறை பொருந்தாதாம். அதனால் ராஜாவுக்கும் ஏகாதிபத்திய எஜமானனுக்கும் சேவகம் செய்யும் திவான் ஆட்சிதான் வேண்டுமாம்!

இதனால் ஏகாதிபத்தியவாதிகளுக்கு ரொம்ப நன்மை. பிரிட்டிஷ் முதலாளித்துவம் சமஸ்தானங்களை வேட்டையாடலாம். கேட்பார் யாருமில்லை. பத்துக் கோடி மக்களை அடக்கி வைப்பதற்காக சமஸ்தான ராணுவங்களை தயார்

செய்யலாம். அவசியமானால் டெல்லியைப் பயமுறுத்தவும் அது பயன்படும் !

(4) சமஸ்தானங்களில் இந்திய யூனியன் சர்க்கார் தலையிடக்கூடாது. ஆனால் யூனியன் சர்க்காரில் சமஸ்தானாதிபதிகளுக்கு அவர்களுக்குரித்தான பிரதிநிதித்துவம் வேண்டுமாம்! யூனியன் சர்க்காரில் 4 காங்கிரஸ் வாதிகளும் 4 லீகர்களும் சிண்டைப் பிடித்துக்கொண்டு நிற்க 4 சமஸ்தானாதிபதிக் கைக்கூலிகள் தங்கள் எஜமானனின் திட்டத்தை நிறைவேற்றலா மல்லவா ?

இதுதான் பிரிட்டிஷாரின் பேய்த் திட்டம். இதில் சமஸ்தானாதிபதிகளின் முக்கியத்துவம் இப்பொழுது எளிதில் விளங்கும். இந்த சமஸ்தானாதிபதிகளுக்குச் சீட்டுக் கொடுக்க சமஸ்தான மக்கள் துவங்கியிருக்கும் போராட்டத்தின் முக்கியத்துவத்தை இனி நான் வற்புறுத்த வேண்டியதில்லை.

---

7. நாடெங்கும் குமுறல்

காஷ்மீரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பத்துகோடி சமஸ்தான மக்களும் போராட்டத்துக்கு விரைகிறார்கள். டில்லியில் கூடப்போகும் அரசியல் நிர்ணயசபைக்கு, தங்கள் சொந்தப் பிரதிநிதிகள்தான் செல்லவேண்டுமென்று கோஷிக்கிறார்கள்.

யதேச்சாதிகார தர்பார்கள் கட்டவிழ்த்துவிட்ட மத யானையைப்போல் ஆர்ப்பாட்டம் செய்கின்றன. திருவாங்கூர் சமஸ்தானத்தில் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் காங்கிரஸ் கொடி, லீக் கொடி, கம்யூனிஸ்ட் கொடி மூன்றுக்கும் தடை விதித்துவிட்டார். போலீஸ் ஆட்சி நடக்கிறது. கூட்டங்களைத் தடை செய்து உத்திரவுகள் போடப்படுகின்றன. காங்கிரஸ்வாதிகளும் கம்யூனிஸ்ட்களும் கைது செய்யப்படுகிறார்கள்.

காஷ்மீர் தினம் கொண்டாடிய கொச்சி மாணவர் இயக்கத்தைக்கூட தாபார் விடவில்லை. பல மாணவர்களை டிஸ்மிஸ் செய்தது. அடக்குமுறை ஆட்சியும், ஊர்வலங்கள்மீது துப்பாக்கிச் சனியன்களால் தாக்குவதும், சிறைகளில் தேசபக்தர்களைச் சித்திரவதை செய்வதும் சகஜமாகிவிட்டன. புதுக்கோட்டையில் 144 ஆட்சி மாமூலாகி விட்டது. மைசூர் சமஸ்தானத்தில், 1742-ல் போடப்பட்ட தடை உத்திரவுகள் இன்னும் நீடிக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையான ஸர் ஏ. ராமசாமி முதலியார் திவானாக வந்துவிட்டார்! ஹைதராபாத் சமஸ்தானமோ அடக்கு முறைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. போலீஸ் தடிகள், சாதாரண துப்பாக்கிகள் போத

வில்லை. கலகக்காரர்களும் கிளர்ச்சிக்காரர்களும் பாமர ஜனங்களைத் தட்டிவிட்டுத் தொந்திரவு செய்கிறார்கள்! அதனால் பிரிட்டிஷ் 'பிரன்' துப்பாக்கித் தொழிற்சாலையை வாங்கி விட்டார்களாம்! பிரன் துப்பாக்கிகளின் ரிட்-டாட்-டாட் இசையுடன் புதிய சகாப்தம் ஆரம்பமாகும். ஒரு லட்சம் துருப்புகளடங்கிய ராணுவத்தை முஸ்தீப்பு செய்து வைத்திருக்கிறார். ஆகாய விமானப்படை ஒன்றும் தயார் செய்து விட்டார்.

இன்னொரு பெரிய சமஸ்தானம் பிகானீர். 13 லட்சம் ஜனங்கள் வாழ்கின்றனர். ராஜாங்கத்தின் வருமானம் 2 கோடி 80 லட்ச ரூபாய்; பிரஜையின் சராசரி தினசரி வருமானம் 32 தம்படி! இந்தச் சமஸ்தான பிரஜைகள், மகாநாடு கூட்டினார்கள். மகாநாட்டுக்கு விவசாயிகள் தேசியக்கொடி தாங்கி வந்தனர். இந்த 'அடாத காரியம்' செய்ததற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். உடனே ஜனங்கள் ஆர்ப்பாட்டம் செய்யவே ராஜாங்கம் தடியரசு நடத்தியது. குண்டு மழை பொழிந்தது. ஒருவர் இறந்தார். பலர் படுகாயமுற்றனர்.

9. அரசியல் நிர்ணய சபை ஸ்தானங்களுக்கும் தங்களுடைய கைக்கூலிகளை அனுப்ப வேண்டுமென்பதற்காக சமஸ்தானதிபதிகள் இந்த மாதிரியான காட்டு மிராண்டித்தன ஆட்சிமுறையை அனுஷ்டிக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி முறையை அனுஷ்டிக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதரவு அவர்களுக்கு இவ்வளவு துணிவைத் தருகிறது.

ஆனால் சமஸ்தான மக்கள் இபக்கமும் பக்குவப்பட்டு விட்டது. தத்தம் அதிக காலத்தை, தாங்கள்தாம் நிர்ண

யிக்க வேண்டுமென்று ஒவ்வொரு சமஸ்தான மக்களும் பிடிவாதமாகப் போராடத் தலைப்பட்டு விட்டார்கள்.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் அரசியலை நிர்ணயிக்க திருவாங்கூர் மக்களால் சர்வஜன வோட்டுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை கூட வேண்டுமென்று சமஸ்தான காங்கிரஸ் கூறுகிறது. சமீபத்தில் கூடிய கொச்சி பிரஜா மண்டலமும் இதே கோரிக்கையை முன் வைத்திருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சி, மலையாளத்தை மூன்று பாகங்களாகத் துண்டு போட்டது. தென் பாகத்திலுள்ளது திருவாங்கூர், நடு மையத்திலுள்ளது கொச்சி; வடபாகத்திலுள்ளது பிரிட்டிஷ் மலபார்—சென்னை மாகாணத்தில் ஒரு ஜில்லா. மலையாளிகளின் தாயகத்தைச் சிதைத்து, அவர்களுடைய கலாச்சாரமும் நாகரீகமும் செழிக்காதபடி தடை போட்டது பிரிட்டிஷ் ஆட்சி. ஆனால் விழிப்படைந்த மக்கள் இதை அனுமதிக்கத் தயாராயில்லை. கேரளத்தின் இரு பெரும் கட்சிகளான காங்கிரஸும் கம்யூனிஸ்ட் கட்சியும் கேரள மக்களின் குடியரசைச் சமைக்க விரும்புகின்றன. கொச்சி சிம்மாசனமும் திருவாங்கூர் மன்னர் பீடமும் இதற்குக் குறுக்கே நின்றால், பொதுமக்கள் அந்த முட்டுக் கட்டையைத் தூக்கி எறிந்து விடுவார்கள்.

தமிழ்க் கவிகள் பலரை ஈன்றெடுத்த தமிழர் வாழும் நாஞ்சில் நாட்டை, தேசிய விநயகம் பிள்ளையின் நாஞ்சில் நாட்டைத் தமிழ் நாட்டிலிருந்து துண்டித்து திருவாங்கூருடன் இணைத்திருக்கிறது ஏகாதிபத்தியம். தமிழகத்துக்கு நடுவே, ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரன் ஊமைத்துரையைக் காட்டிக் கொடுத்த ராஜவம்சத்தின் பெயரால் புதுக்

கோட்டை சமஸ்தானமொன்று இருக்கிறது. தங்கள் இனத்தினருடன் சேர்ந்து வாழ நாஞ்சில் நாட்டுத்தமிழரும் புதுக்கோட்டைத் தமிழரும் விரும்புகிறார்கள். புதிய தமிழகத்தில், தமிழ்க் கலையையும் நாகரிகத்தையும் வளர்க்க விரும்பும் தமிழர்களும் இதை ஆதரிக்கிறார்கள்.

ஆந்திர மக்களின் குடியரசை அமைக்க விரும்பாத ஆந்திரன் இல்லை. ஆந்திரர்களின் தாயகத்தில் ஒரு பகுதி நிஜாமின் காலடியில் கிடக்கிறது. 90 லட்சம் தெலுங்கர்கள் நிஜாம் சமஸ்தானத்தில் வாழ்கிறார்கள். அந்தப் பிரதேசத்தையும், சென்னை மாகாணத்திலுள்ள ஆந்திர ஜில்லாக்களையும் இணைத்து, புதிய தெலுங்குக் குடியரசை ஸ்தாபிக்க வேண்டுமென்பது அவர்கள் லட்சியம். ஒரு லட்சம் அங்கத்தினர்களைத் திரட்டி நிற்கும் ஹைதராபாத் ஆந்திரர் மகாநாடு என்ற ஸ்தாபனம் ஹைதராபாத் சமஸ்தானத்தில் மிகப் பெரிய ஜனசக்தியாக விளங்குகிறது.

மைசூர் சமஸ்தானத்திலும், ஹைதராபாத்திலும், பம்பாய், சென்னை மாகாணங்களிலும், ஜாம்கண்டி, ராம்துர்க், அகால்காட் முதலிய குட்டி சமஸ்தானங்களிலும் சிதறிக் கிடக்கின்றனர் கன்னடியர்கள். இப்படிப் பல நிர்வாகங்களில் பிரிந்து வாழ அவர்கள் தயாராயில்லை. தேசிய இயக்கத்தில் புதிய ஆதர்சம் பெற்ற கன்னடியர்கள் இன ஒற்றுமைக்காக, தாயகத்தின் ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறார்கள். கன்னடியர் வாழும் கன்னட நாட்டில் கன்னட மக்களின் குடியரசு மிளிர வேண்டுமென்பது அவர்கள் லட்சியம்.

36 லட்சம் மராத்தியர்கள் ஹைதராபாத்தில் இருக்கிறார்கள். 55 லட்சம் பேர் பீகார், மத்திய மாகாணத்தில்

வசிக்கிறார்கள். பம்பாயில் ஒரு கோடி. தவிர, இன்னும் பல குட்டி சமஸ்தானங்களில் 19 லட்சம்பேர் சிக்கிச் சிதறிக் கிடக்கிறார்கள். சிவாஜி காலத்திலேயே, இன உணர்ச்சி பெற்றவர்கள் மகாராஷ்டிரர்கள். மகாராஷ்டிர தாயகத்தை இத்தனை பாகங்களாகப் பிரித்து, துண்டித்திருப்பதை அனுமதிக்க முடியாதென்பது அவர்கள் கோஷம். குட்டி சமஸ்தானாதிபதிகளுக்கும் நிஜாமுக்கும் 'பென்ஷன்' கொடுத்து, 'ரிட்டயராக்கிவிட்டு, மகாராஷ்டிர மக்களின் குடியாசை ஸ்தாபிக்க மகாராஷ்டிர தேசத்தார்கள் விரும்புகிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சியின் குடை நிழலில், பம்பாய் மாகாணத்தில் மகாராஷ்டிரர்களுடன் குஜராத்திகளை முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறார்கள். 46½ லட்சம் குஜராத்தியர்கள் பம்பாய் மாகாணத்தில் வசிக்கிறார்கள். மீதிப் பேர் மேற்கு இந்தியாவிலுள்ள 18 சமஸ்தானங்களிலும், அகத்தியவாரிலுள்ள மூன்று ஏஜன்ஸிகளிலும், பம்பாய் மாகாணத்துக்குள்ளேயே இருக்கும் 15 சமஸ்தானங்களிலும் வாழ்கிறார்கள். குஜராத்தி இனத்தையும் அவர்களுடைய தாயகத்தையும் இப்படிக் கூறுபோட்டு வைப்பது இனி சாத்தியமல்ல. இந்த சமஸ்தானாதிபதிகளுக்குச் சீட்டுகொடுத்துவிட்டு, குஜராத்தியர்களின் குடியாசு தோன்றும்.

இதே விதமாகத்தான், ஒவ்வொரு தேசீய இனமும் துண்டாடப்பட்டிருக்கிறது. அதனால் தான் 'சமஸ்தானங்கள் இந்தியாவை நிரந்தரமாகப் பிளவுபடுத்துகின்றன, என்று மகாத்மாகாந்தி கூறினார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் சமஸ்தானாதிபதி முறைக்கும் சீட்டுகொடுக்க வேண்டுமென்று ஜவஹர்லால் கூறினார்.

பத்துக் கோடி சமஸ்தான மக்கள் சமஸ்தானாதி முறைக்கு சாவுமணியடிக்கப் போராடுகிறார்கள். யதேச்சாதிகாரத்தை ஒழிக்கும் போராட்டம் அது. அரசியல் நிர்ணய சபையில் சமஸ்தானாதிபதிகளை, தனது ஐந்தாம் படையாக உபயோகிக்க ஏகாதிபத்தியம் போட்டிருக்கும் திட்டத்தை உடைக்கும் போராட்டம் அது. இந்தியாவில் வாழும் சகல தேசிய இனங்களும் தத்தம் தாயகத்தின் ஒற்றுமைக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் நடத்தும் போராட்டம் அது. 40 கோடி இந்தியர்களின் போராட்டம் அது.

இந்தப் போராட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பெருமை காஷ்மீருடையது.

8. தலைவர்கள் போக்கு

காங்கிரஸ், லீக் தலைவர்கள் சமஸ்தான குடி மக்களின் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. அதற்குமாறாக, போராட்டங்களை எதிர்க்கிறார்கள் !

சில மாதங்கள் முன்னால் சமஸ்தானாதிபதிகளின் நரேந்திர மண்டலம் கூடியபோது, "நாம் பிறந்த நாடு சுதந்திரமாகவும் உன்னதமாகவும் திகழவேண்டுமென்று விரும்புகிறோம்" என்று போபால் நவாப் பேசினார். பண்டித நேருவே அதை வரவேற்றார். ஆனால் அதே போபால் சமஸ்தானத்தில் 144 ஆட்சி நடப்பதை நேரு மறந்து விட்டார் !

உதயபூரில் பண்டித நேரு தலைமையில் அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் மகாநாடு கூடிற்று. 1929-ல் சர்வ ஜன வோட்டுரிமை கோரிய ஸ்தாபனம் 1945 டிஸம்பரில் உதயபூர் மகாநாட்டில் கூடியபோது, "சர்வஜன வோட்டுரிமை காரிய சாத்தியமானதல்ல" என்றார் பண்டிதநேரு. 100-க்கு 20 பேருக்கு வோட்டளித்தால் போதுமென்ற தீர்மானம் நிறைவேறியது.

பிரிட்டிஷ் மந்திரிகள் டெல்லிக்கு வந்தனர். சமஸ்தான பிரஜைகளின் குரலை அலட்சியம் செய்தனர் இதைத் தலைவர்கள் அநுமதித்தனர்.

சமஸ்தானாதிபதிகளைத் தூக்கிவிட்டு, முக்கிய பாத்திரமாகத் தயார் செய்தான் ஏகாதிபத்திய சூத்திரதாரர். இதைத்யும் நம் தலைவர்கள் கண்டிக்கவில்லை. போபால் நவாப் காந்தி, ஜின்னாவை மாறி மாறிச் சந்தித்தார். நேருவும் போபாலுடன் அளவளாவினார்.

மே மாதம் 20-ம் தேதி காஷ்மீரில் மின்னல் தாக்குதல் தொடங்கியது. ஜூன் மாத முதல் வாரத்தில், டெல்லியில் சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டில் நிர்வாகக் கமிட்டி கூடியது. "சமஸ்தானாதிபதிகளில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் தேசபக்தி இருக்கத்தான் இருக்கும்" என்று ராஜாக்களுக்கு, நற்சாட்சிப் பத்திரம் அளித்தார் ஸர்தார் படேல்! அதே சமயத்தில் காஷ்மீர் போராட்டத்தைக் கண்டித்தார். பண்டித நேரு கூட காஷ்மீர் மக்களின் லட்சியத்தைக் குறை கூறினார்.

ராஜாக்களுடன் சமரசம் செய்ய இன்னொரு தடவை சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டுத் தலைமை 'பல்டி' அடித்தது. சமஸ்தான சட்ட சபைகள் அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் போதுமானது என்று கூறியது! சமஸ்தானங்களிலுள்ள சட்ட சபைகள் பொம்மை சட்டசபைகள் தான்! காஷ்மீர் சட்டசபையைப் பற்றி முதலில் குறிப்பிட்டேன். 22 பிரதிநிதிகளை அ. நி. சபைக்கு அனுப்ப வேண்டிய ஹைதராபாத் சட்ட சபையில் 21 அங்கத்தினர்கள்; அதில் 13 பேர் நிஜாமால் நியமிக்கப்படுவார்கள்; 2 பேர் ஜமீன்தார்கள், 2 பேர் வக்கீல்கள். மீதி 4 பேர் பிரதமரால் நியமிக்கப்படுவார்கள். பிரதமரை நிஜாம் நியமிப்பார்!

புதிதாக அமுலுக்கு வரப்போகும் சட்டப்படி, புதிய சட்ட சபையில் 88 அங்கத்தினர்கள் இருப்பார்கள்; இதில் 42 பேர் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதில் 21 பேர் ஹிந்துக்கள், 21 பேர் முஸ்லீம்கள். முஸ்லீமகளைப்போல ஆறு மடங்கு ஹிந்துக்கள். இருந்தாலும் சம பிரதிநிதித்துவம்' அளிக்கிறார் நிஜாம்!

இந்த மாதிரி பொம்மைச் சட்ட சபைகள் அ. இ. [illegible] சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதே நேரு-பட்டேல்-பட்டாபி போன்றோர் யோசனை!

எல்லா பிரதிநிதிகளும் இவர்களால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்றுகூடத் தலைவர்கள் உறுதியாய்க் கூற வில்லை. பாதிப்பேர் சமஸ்தான மன்னர்களால் நேரடியாக நியமிக்கப்பட வேண்டுமென்றும், பாதிப்பேர் இந்தப் பொம்மை சட்ட சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்றும் ராஜாக்கள் பட்டாங்கள் சொல்கின்றன! இதையும் தலைவர்கள் ஏற்றனர்!

இந்தக் கொள்கை ஏகாதிபத்தியத்துக்கும் 'சமஸ்தானாதிபதி களுக்கும்' திமிர்த்தாண்டவமாட இடமளிக்கிறது.

சமஸ்தான மக்களின் போராட்டங்களை இந்த வெள்ளத்தில் அடக்கினால், தலைவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்களென்று எண்ணினார் வேவல். அதனால்தான் நேருவுக்குத் தடை போடக் காஷ்மீர் அதிகார வர்க்கத்தை அனுமதித்தார். தடையை மீறிய நேருவுக்குச் சிறையைத் திறந்தான் கக்! அப்படித்தானே அவசரத்திலும் கக் அல்ல நேருவைச் சிறையில் போட்டது! ஏகாதிபத்தியம் தான் கக்குவைக் கொண்டு நேருவின் பிரஜா உரிமையைப் பறித்தது.

நேரு திரும்பி வந்தார். காஷ்மீரிகளைச் சந்தித்துப் பேச அவரால் முடியவில்லை. அதிகார வர்க்கத்தின் ஆணவம் வெற்றி படைத்தது.

ஆனால் பொதுமக்கள் இந்த அவமானத்தைச் சகிக்க மறுத்தனர். நாடெங்கும் ஹர்த்தால்கள் நடந்தன. காஷ்மீர் போராட்டத்தில் புதிய தெம்பு காணப்பட்டது.

தலைமை செல்லும் பாதையை நிராகரித்து, பொதுமக்கள் போராட்டப் பாதையில் முன்னேறினார்கள். காஷ்மீருக்குப் படையெடுக்கத் தயாரென்று 40 கோடி மக்கள் கோஷித்தார்கள்.

ஆனால் பொதுஜனங்களுக்குப் பணிய, தலைமை தயாராயில்லை. போபால் நவாபைப் போய் படேல் சந்தித்தார். போபால் காஷ்மீருக்குத் தந்தியில்லாக் கம்பி மூலம் செய்தியனுப்பினார். கக் போபால் வந்து நவாபைச் சந்தித்தான். அதன் பின் பம்பாய் வந்து படேலைப் பார்த்தான். நேரு மீதுள்ள தடையை ரத்து செய்வதாகவும் தலைவர்களை விடுவிப்பதாகவும் ஒப்புக்கொண்டானாம்! ஆனால் அதற்கு விலையாக காஷ்மீர் தேசிய மகாநாடு அதன் இயக்கத்தை 'வாபஸ்' வாங்கிவிட வேண்டுமென்றானாம், பலாத்கார குற்றம் சாட்டப்படக்கூடியவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டுமென்றானாம்! இதைப் படேல் ஒப்புக்கொண்டு விட்டாரென்று தெரிகிறது.

100 வருஷங்களுக்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனியார் காஷ்மீரை டோக்ரா குடும்பத்துக்கு விற்றார்கள். இன்று இந்தியர் காஷ்மீரை ஏகாதிபத்தியப் பொம்மைகளிடம் விற்பதா?

பண்டித நேரு ஸ்ரீநகரில் தங்கினார். ஷேக் அப்துல்லாவிடம் பேசினார்.

20,000 ஜனங்கள் கூடி அவரை ஸ்ரீ நகரில் வரவேற்றார்கள். அவர்களைக் கலைந்து செல்லும்படி கூறினாராம் நேரு! 60 நாட்களாக பயங்கார ஆட்சியை எதிர்த்துப் பல்லைக் கடித்துக்கொண்டு போராடும் வீரர்களுக்கு 40 கோடி

மக்களின் ஆதாரகச் சென்றிருக்கும் நேரு வாழ்த்தலை கூறக் கூடாதா? வேவல்-ஹாரிசின் தயவை நாடியா நேரு நிற்க வேண்டும்?

93 வோட்டுகளுக்காக சமஸ்தானாதிபதிகளை தாஜா செய்ய வேண்டாம், மக்களின் போராட்டத்தை ஆதரியுங்கள், சமஸ்தானக் குடிமக்களின் பிரதிநிதிகள் அ. நி. சபைக்கு வருவார்களென்று நாம் சொல்கிறோம்.

ஆனால், லீக் எதிர்புணர்ச்சியால் உதைபட்டு, ஏகாதிபத்தியத்தின் அக்கிரம சக்திக்கு அத்தாட்சிப் பத்திரம் கொடுத்து, லீகை அடக்க ஏகாதிபத்திய உதவியை நாடியதைப்போல, அ. நி. சபையில் லீகை எதிர்க்க சமஸ்தானாதிபதிகளின் வோட்டுகளைப் பெறலாமென்று தலைமை கணக்குப் போடுகிறது.

லீக் தலைமையும் இதே கணக்குத்தான் போடுகிறது. பெரும்பான்மையான முஸ்லீம்கள் வசிக்கும் காஷ்மீர் போராட்டத்தை ஜனாப் ஜின்னா கண்டித்தார். "கலகக்காரர்களின் தூண்டுதல்," "சிறு ஜனப் பகுதியின் கிளர்ச்சி" என்று ஏகாதிபத்திய பாஷையில் கண்டித்தார்! ஹிந்து காங்கிரஸின் கைக்கூலிகள் நடத்தும் போராட்டமென்று ஹிந்து பூச்சாண்டியையும் முஸ்லீம் லீகர்கள் கிளப்பி விட்டார்கள். அது போதாதென்று 1001-வது தடவையாக கம்யூனிஸ்ட் பூச்சாண்டியையும் கிளப்பி விட்டார்கள்.

அதே சமயத்தில், ஜின்னா சாஹேப் ஹைதராபாத் வந்து நிஜாமைத் தாஜா செய்கிறார். ஏன்? போபாலும் ஸர். ஸி. பி. யும் ஐக்கிய இந்தியாவைப்பற்றிப் பேசி காங்கிரஸ் தலைமையை வசப்படுத்துவதைப்போல், நிஜாம் முஸ்

லீம்களின் ஐக்கியத்தைப்பற்றிப் பேசி ஜின்னாவை வசப்படுத்துகிறார். ஜின்னாவும் நிஜாமின் புது சீர்திருத்தங்களை ஆதரித்துப் பேசினார். ஜனநாயகத்தையே ஏளனம் செய்து பேசிவிட்டுப் போய்ச் சேர்ந்தார்!

அடிப்படை ஜனநாயகக் கொள்கைகளைத் துறந்துவிட்டு, ஒருவரை யொருவர் எதிர்த்து அரசியல் நிர்ணய சபையில் சண்டைபோட ஆட்களைத் திரட்டும்பொருட்டு, சுதேசி மன்னர்களின் நட்பைத் தேடுவதில் போட்டி போடுகிறார்கள்!

ஆனால் சுதேசி மன்னர்களும் அவர்களுடைய குலாம்களும் மூவர்ணக் கொடிக்கும் ஜே போடமாட்டார்கள்; பிறைச்சந்திரக் கொடிக்கும் ஜே போடமாட்டார்கள். வேவல் துரை சொற்படி வோட்டுப் போடுவார்கள். இதை உணராமல், தலைமைகள் அவர்களுடன் பேரம் பேசுவது பெரிய சூதாட்டமாக முடியும்.

ஆனால் இந்தப் போக்குகளையும் கணக்குகளையும் கவிழ்க்கும் சக்தி ஜனங்களிடம் இருக்கிறது. சமஸ்தான மக்கள் போராட்டத்தை ஆதரித்து இந்தியர்கள் அனைவரும் எழுந்தால்,

சமஸ்தானாதிபதி முறைக்குச் சாவுமணி யடிக்க முடியும்.

பிரிட்டிஷ் திட்டத்தைக் குழி தோண்டிப் புதைக்க முடியும்.

தேசிய இனங்களின் தாயகங்களை ஒன்றுபடுத்த முடியும்.

இன உரிமை அடிப்படையில் சுதேசித் திட்டத்தை வகுத்து; ஏகாதிபத்தியத்துக்கு இறுதிச் சாவு மணி அடிக்க முன்னேற முடியும்.

அனுபந்தம்

பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு சமஸ்தானாதிபதிகள் சமர்ப்பித்த யதாஸ்து

ரகசிய தஸ்தாவேஜி

I

(அ) பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு சுதந்திரமோ பரிபூர்ண சுயாட்சியோ அளிப்பதற்கு சமஸ்தானங்கள் தடை போடாது, குறுக்கே நிற்காது.

(ஆ) பிரிட்டிஷ் இந்தியா சுதந்திரமோ அல்லது வேறு ரூபத்தில் சுயாட்சி அடைந்தால், ஆதிபத்திய உரிமைகள் (சமஸ்தானங்கள்மீது பிரிட்டிஷ் சர்க்காருக்குள்ள உரிமை) ரத்தாகிவிட வேண்டும் புதிய இந்திய சர்க்காருக்கும் சமஸ்தானங்களுக்குமுள்ள உறவுகள் பரஸ்பர சமரசம் அல்லது ஒப்பந்தங்கள் மூலம் நிர்ணயிக்கப்படும்

(இ) பிரிட்டிஷ் சர்க்காருக்கும் புதிய இந்திய சர்க்காருக்கும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டால், இந்திய சமஸ்தானங்களை பரிபூர்ணமாக, சம அந்தஸ்தில், கலந்தாலோசிக்க வேண்டும்.

II

(அ) முடியாட்சி, முறையும், இந்திய சமஸ்தானாதிபதிகளின் ராஜ பரம்பரை உரிமைகளும் புதிய திட்டத்தால் பாதிக்கப்படமாட்டா.

(ஆ) உள்நாட்டு நிர்வாகத்தில் இந்திய சமஸ்தானங்கள் பூர்ண உரிமைகளை அனுபவிக்கும். ஆனால் பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரங்கள், போக்குவரத்து, சுங்க இலாகா முதலிய பொது விஷயங்களை நிர்வகிக்கவும், அவற்றின் கொள்கைகளை நிர்ணயிக்கவும் மத்திய நிர்வாகம் ஒன்றை சிருஷ்டிப்பதைப்பற்றி, புதிய சர்க்காருடன் ஒரு சமரசத்துக்கு வர சமஸ்தானங்கள் தயாரா யிருக்கின்றன. இந்த மத்திய நிர்வாகத்தில் புதிய சர்க்காருடன சமஸ்தான சர்க்கார்களும் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டும் இந்த பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரத்தை பரஸ்பர சம்பாஷணைகள் மூலம் தீர்மானித்துக் கொள்ளலாம்.

III

பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் உள்நாட்டு நிர்வாகத்தைப்பற்றிய விவாதங்களிலோ, பாக்கிஸ்தான், சீக்கியஸ்தான், திராவிடஸ்தான் முதலிய பிரச்னைகளைப்பற்றிய விவாதங்களிலோ சமஸ்தானங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை. மந்திரிகோஷ்டியைப் பேட்டிகாணும் பிரமுகர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களைக் கூறலாம். ஆனால், அவர்கள் சமஸ்தானங்களையோ, ஒரு தனிப்பட்ட சமஸ்தானத்தையோ தங்கள் தனிப்பட்ட அபிப்பிராயத்துக்கு கட்டுப்படுத்த முடியாது.

IV

சமஸ்தானங்களின் உள்நாட்டு நிர்வாகத்தில் பிரிட்டிஷ் சர்க்காரோ புதிய சர்க்காரோ கட்டளையிட முடியாது ; தலையிடவும் முடியாது. ஸ்தல நிலைமை

யையும் சுற்றுணர்ச்சியையும் மதிப்பிட்டு, அரசாங்கத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பை, குறிப்பிட்ட அளவு பெறுவதற்கு சமஸ்தானங்கள் நடவடிக்கைகள் எடுக்கும். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் முறையில், (சட்ட சபைக்குப் பொறுப்பு வாய்ந்த) நிர்வாகம் அமைப்பது அவசியமென்றோ இந்திய நிலைமைக் கேற்றதென்றோ கருதக்கூடாது.

Cwdg
1-11-90

Adal Padal Press, 82, Wallajah Road, Mount Road, Madra

நனவாக வேண்டிய

கனவு

★

'குயிலன்'

★

குயிலன் எழுதிய சிறுகவிதைகளின் தொகுப்பு அழகிய பதிப்பாக வெளிவருகின்றது.

விலை ரூபாய் ஒன்று

விவரங்களுக்கு

இலக்கிய மன்றம்

சைதாப்பேட்டை, சென்னை